செ.வெ.எண்: 891/2016 நாள்: 19.12.2016

## பத்திரிகை செய்தி

## ஆதரவற்ற குழந்தைகளுக்கு பிற்காப்பு பராமரிப்பு வழங்க தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைணந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வகையில் குழந்தைகள் இல்லத்தில் தங்கி படித்த ஆதரவற்ற/பெற்றோரில்லாத 18 வயது நிறைவடைந்த குழந்தைகளுக்கு பிற்காப்பு பராமரிப்பு மற்றும் அவர்களுக்கு தொழில்சார்ந்த கல்வி வழங்க விருப்பமுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம். 18 வயதிலிருந்து 3 ஆண்டு காலம் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ. 2000/- வீதம் அந்நிறுவனத்திற்கு வழங்கப்படும். விண்ணப்பம், நிபந்தனைகள், நடைமுறைகள் குறித்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 3-வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில், தொலைபேசி எண் : 04652 ___ 278980 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு அறியலாம்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**

கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.